திரு. நா. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மடத்தினுடைய சொத்து அதிகமாக இருக்கிறது. 150 ஏக்கர் வரையில் பூமி இருக்கிறது. அதிகமான பக்தர்கள் வெள்ளிக்கிழமை, திங்கட்கிழமைகளில் வந்து கொண்டிருக்கிறார்கள். கார்த்திகை தீபத்தின் போது ஏராளமான வசூல் ஆகிறது. இந்தக் கோவிலை ஒரு சிலபேர் பயன்படுத்திக்கொண்டு சமூக ஆதிக்கம் செலுத்தி வருவது அந்தப் பகுதியில் தொடர்ந்து இருந்து வருகிறது ஒரு உண்மையாகும். இதை மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், பெருந்துறை வட்டம், திங்களூர் அருகிலுள்ள அப்பச்சிமார் மடம் ஒரு அற நிறுவனம் அல்ல என கோவை மாவட்ட துணை ஆணையர் போட்ட உத்தரவை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளதால், மேற்படி மடத்தினை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின்கீழ் கொணர சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. ஒழுங்குப் பிரச்சினை.

(அ) முன்னாள் முதலமைச்சர்மீது வழக்கு தொடரப்படும் என சட்ட அமைச்சர் அவைக்கு வெளியே கூறியது குறித்து.

திரு. பி. ஆர். சுந்தரம்: பாயிண்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர், டாக்டர் புரட்சித் தலைவி மீது கிரிமினல் வழக்கைத் தொடருவோம் என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கோட்டையிலே நிருபர்களுக்கு பேட்டி கொடுத்திருக்கிறார்கள். ஒரு அவை நடந்து கொண்டிருக்கும்போது, அவையிலே அந்தக் கருத்தைச் சொல்லாமல், அவர் கோட்டையிலே நிருபர்களுக்குக் கூறியிருப்பதை இந்த அவையின் உரிமையை மீறிய செயலாக நான் கருதுகின்றேன். இந்தப் பிரச்சினையானது, ஒரு தனிப்பட்ட நபர் மீது தொடருகின்ற வழக்கல்ல. அவர்கள் பல இலட்சக்கணக்கான மக்களுடைய ஆதரவைப் பெற்றவர்கள், முன்னாள் முதலமைச்சர். அதை, இந்த அவையிலே அறிவிக்காமல், கோட்டையிலே,

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் தெரிவித்ததன் மூலமாக இதில் ஏதோ சதி வலை பின்னப்படுகிறது என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பொய் வழக்கை எதிர்த்துக்கூட இன்று பல்லாயிரக்கணக்கானவர்கள் உண்ணாவிரதத்திலே கலந்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசி முடியுங்கள்.

திரு. பி. ஆர். சுந்தரம்: அவரும் அந்த வழக்குகளையெல்லாம் சந்திப்பேன் என்று தான் கூறியிருக்கிறார். நீங்கள் இந்தப் பொய்யான வழக்குகளையெல்லாம் போட்டு, எங்களுடைய ஆட்சிக் காலத்திலே செய்த தவறுகள் என்று கூறி, பொய்யான வழக்குகளைப் போட்டிருக்கிறீர்கள். இவைகளையெல்லாம் சந்திக்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள். எனவே, பொய்யான வழக்குகளைப் போட்டு, தூங்குகின்ற புலியை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. நீங்கள் உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள் என்று சொன்னேன். (குறுக்கீடு) நீங்கள் முதலிலே உட்காருங்கள். உறுப்பினர் நேற்றையதினம் என் அறையிலே வந்து இதுபற்றிக் கொடுத்தார். 'இது உரிமைப் பிரச்சினையாகாது, அன்றாட அரசாங்க நடவடிக்கை' என்று தெளிவாகச் சொல்லிவிட்டேன். ஒரு வேண்டுகோள் வைத்தீர்கள். 'நான் இதை அவையிலே எழுப்புகிறேன், இதே பதிலை அவையிலே சொல்லுங்கள்' என்றீர்கள், நான் ஏற்றுக்கொண்டேன், அத்தோடு பிரச்சினை முடிந்தது.

4. தகவல் கோரல்

உறுப்பினர் காரில் வந்தபோது மறித்து காரை சிலர் பறித்துச் சென்றது குறித்து.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. வைத்தியலிங்கம் அவர்கள் தன்னுடைய இருப்பிடத்திலிருந்து, சட்டமன்றத்தை நோக்கி, சில நாட்களுக்கு முன்னால், இங்கே வருகிறபோது, கிண்டி காந்தி மண்டபம் அருகே அவரது காரை நிறுத்தி, காரிலிருந்து அவரை இறக்கிவிட்டுவிட்டு, சில நிறுவனங்களைச் சார்ந்தவர்கள், அந்த காரை பறித்துச் சென்றதாக சில செய்திகள் வந்தன. மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டுவருவதெல்லாம், இப்படிப்பட்ட நிதி நிறுவனங்களை நடத்திக் கொண்டிருப்பவர்கள்,